**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

## "பருவநிலை மாற்ற சவால்களை எதிர்கொள்ளும் திட்டங்களை வகுப்போம்" - சுனாமி நினைவு தினத்தில் முதல்வர் ஸ்டாலின் உறுதி

**சென்னை:** 19 ஆம் ஆண்டு சுனாமி நினைவு தினத்தை முன்னிட்டு, தமிழக முதல்வர் ஸ்டாலின் "பருவநிலை மாற்றத்தின் (Climate Change) சவால்களை எதிர்கொள்ளும் ஆக்கபூர்வமான திட்டங்களுடன் இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்ளும் கட்டமைப்புகளை உருவாக்குவோம்." என உறுதியளித்துள்ளார்.

தமிழகம் மற்றும் புதுச்சேரி கடலோரப் பகுதிகளில் கடந்த 2004-ம் ஆண்டு டிசம்பர் 26-ம் தேதி சுனாமி பேரலை தாக்கியது. இதில் பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். இந்தச் துயர சம்பவம் நடந்து 19 ஆண்டுகள் ஆகியும் இன்னமும் அது ஆறாத வடுவாகவே உள்ளது.

இந்நிலையில், தமிழக முதல்வர் ஸ்டாலின் இது குறித்து தனது எக்ஸ் தளத்தில், "பல்லாயிரம் பேரின் வாழ்வைப் புரட்டிப் போட்டு, தமிழ்நாட்டை மீளாத்துயரில் ஆழ்த்திய ஆழிப்பேரலையின் 19-ஆம் ஆண்டு. சுனாமியால் உயிரிழந்தோரை நினைவில் ஏந்தி, பருவநிலை மாற்றத்தின் (Climate Change) சவால்களை எதிர்கொள்ளும் ஆக்கபூர்வமான திட்டங்களுடன் இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்ளும் கட்டமைப்புகளை உருவாக்குவோம். அதன் முதல்படியாக இயற்கையைக் காக்க உறுதியேற்போம்" எனத் தெரிவித்துள்ளார்.

## போதை பொருளுக்கு எதிராக மிகப்பெரிய இயக்கம்: வீர பாலகர் தினத்தில் பிரதமர் மோடி அழைப்பு

**புதுடெல்லி:** மது மற்றும் போதை பொருட்கள் பழக்கத்துக்கு எதிராக மிகப்பெரிய இயக்கத்தை தொடங்க வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

தேசிய வீர பாலகர் தினம் நேற்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி டெல்லியில் உள்ள பாரத்மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் பிரதமர் மோடி பங்கேற்றார். அப்போது அவர் பேசியதாவது: சீக்கியர்களின் 10-வது குரு கோவிந்த் சிங்கின் இளையமகன்கள் ஜோராவர் சிங், பாபாஃபதே சிங்கின்

தியாகத்தை நினைவுகூரும் வகையில் வீர பாலகர் தினம் கொண்டாடப்படுகிறது.

நமது முன்னோர்கள் இந்திய மண்ணை காப்பாற்ற தங்களது இன்னுயிரை தியாகம் செய்தனர். குரு கோவிந்த் சிங், பிர்சா முண்டா போன்ற தலைவர்களின் தியாகம் ஒட்டுமொத்த நாட்டுக்கும் உத்வேகம் அளிக்கிறது. நமது பாரம்பரியத்தை போற்றிப் பாதுகாக்க வேண்டும். அப்போதுதான் இந்தியா குறித்த உலகின் சிந்தனைகள் மாறும். தற்போது அடிமைத்தன மனநிலையில் இருந்து இந்தியா மீண்டு வருகிறது.இது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது.

இன்றைய சூழலில் பல்வேறு சர்வதேச சவால்களுக்கு இந்தியா தீர்வு அளித்து வருகிறது. பொருளாதாரம், அறிவியல், ஆராய்ச்சி, விளையாட்டு என அனைத்து துறைகளில் இந்திய புதிய உச்சத்தை தொட்டு வருகிறது. இது இந்தியாவின் காலம். அடுத்த 25 ஆண்டுகள் நாம் கடினமாக உழைக்க வேண்டும். ஒரு நொடியைக்கூட வீணாக்கக்கூடாது. இந்திய மண்ணின் பெருமையை உலகம் முழுவதும் பறைசாற்ற வேண்டும். ஒன்றுபட்டு உழைத்து இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்ற வேண்டும்.

சுதந்திர போராட்ட காலத்தில் இந்தியாவில் இளைஞர்களின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது. ஆனாலும் அன்றைய இந்திய இளைஞர்கள் நாட்டின் விடுதலைக்காக போராடினர். அவர்களின் சக்தியால் இந்தியா சுதந்திரம் பெற்றது.

இப்போது உலகில் இளைஞர்கள் அதிகம் வாழும் நாடு என்றபெருமையை நாம் பெற்றுள்ளோம். இன்றைய இந்திய இளைஞர்கள் கற்பனைக்கு எட்டாத உயரத்துக்கு இந்தியாவை கொண்டு செல்ல வேண்டும் என்று அழைப்புவிடுக்கிறேன். நசிகேதன், அபிமன்பு, துருவன், ஏகலைவன் வரலாறை படிக்க வேண்டும். மிக இளம் வயதில் சந்திரகுப்தா மவுரியா மிகப்பெரிய ராஜ்ஜியத்தை வழிநடத்தினார். இந்திய இளைஞர்கள் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அவர்கள் எதிர்கால இந்தியாவை வெற்றிப் பாதையில் வழிநடத்துவார்கள்.

புதிய கல்விக் கொள்கை 21-ம்நூற்றாண்டில் புதிய இந்தியாவைஉருவாக்கும். நாடு முழுவதும் 10,000 அடல் சிந்தனை ஆய்வகங்கள் செயல்படுகின்றன. இவற்றின் மூலம் மாணவ, மாணவியர் பல்வேறு ஆராய்ச்சிகளில் ஈடுபட ஊக்கவிக்கப்படுகின்றனர். அனைத்து விளையாட்டுகளிலும் இந்திய இளைஞர்கள் சாதனை படைத்து வருகின்றனர். அவர்களின் சாதனைகளால் சர்வதேச அரங்கில் இந்திய தேசிய கொடி மிக உயரத்தில் பறக்கிறது.

மது பழக்கம், போதை பொருட்கள் பழக்கம் மிகப்பெரிய பிரச்சினையாக உருவெடுத்திருக்கிறது. இந்த தீமையில் இருந்து இந்திய இளைஞர்களை காப்பாற்ற வேண்டும். அதற்காக மது பழக்கம், போதை பொருட்கள் பழக்கத்துக்கு எதிராக மிகப்பெரிய இயக்கத்தை தொடங்க வேண்டும். அனைத்து மதத் தலைவர்கள், சமூக அமைப்புகள் இந்த இயக்கத்தை முன்னின்று நடத்த வேண்டும். வலுவான இளைய சமூகத்தை உருவாக்க வேண்டும். இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

## உள்நாட்டில் தயாரான ஏவுகணை அழிப்பு கப்பல் ‘ஐஎன்எஸ் இம்பால்’ நாட்டுக்கு அர்ப்பணிப்பு

**மும்பை:** வடகிழக்கு நகரம் ஒன்றின் (மணிப்பூர் தலைநகர்) பெயர் சூட்டப்படும் இந்தியாவின் முதல் போர்க் கப்பலான ‘ஐஎன்எஸ் இம்பால்’ நேற்று நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

அதிநவீன ஏவுகணை அழிப்புகப்பலான ஐஎன்எஸ் இம்பால், இந்திய கடற்படையின் போர்க்கப்பல் வடிவமைப்பு பிரிவால் வடிவமைக்கப்பட்டது. டிஆர்டிஓ உள்ளிட்ட பொதுத் துறை மற்றும்தனியார் துறை பங்களிப்புடன் மும்பையில் உள்ள மசகான் கப்பல் கட்டும் தளத்தில் உருவாக்கப்பட்டது. விசாகப்பட்டினம் வகை ஏவுகணை அழிப்பு கப்பலில் இது மூன்றாவது கப்பலாகும். இக்கப்பல் 163 மீட்டர் நீளமும், 7,400 டன் எடையும் கொண்டது. மணிக்கு 56 கி.மீ. வேகத்தில் பயணிக்க கூடியது. இதன் 75 சதவீத பாகங்கள் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டவை.

துறைமுகத்திலும் கடலிலும் பல்வேறு கட்ட சோதனைகளை முடித்த பிறகு கடந்த அக்.20-ம் தேதி இந்திய கடற்படையிடம் ஜஎன்எஸ் இம்பால் அளிக்கப்பட்டது. இதையடுத்து கடந்த நவம்பரில் சூப்பர்சோனிக் பிரம்மோஸ் ஏவுகணையை வெற்றிகரமாக பரிசோதித்தது. இந்நிலையில் மும்பை கடற்படை தளத்தில் நேற்று நடைபெற்ற விழாவில் இக்கப்பல் நாட்டின் பாதுகாப்புக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங், மகாராஷ்டிர முதல்வர் ஏக்நாத் ஷிண்டே, கடற்படை தளபதி அட்மிரல் ஆர்.ஹரிகுமார் உள்ளிட்டோர் விழாவில் கலந்து கொண்டனர்.

## முன்னாள் பிரதமர் வாஜ்பாய்க்கு தலைவர்கள் புகழாரம்: தமிழக பாஜக சார்பில் நலத்திட்ட உதவிகள்

**சென்னை:** முன்னாள் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் 99-வது பிறந்தநாளை முன்னிட்டு தலைவர்கள் புகழாரம் சூட்டியுள்ளனர்.

முன்னாள் பிரதமர் வாஜ்பாய் 99-வது பிறந்தநாள் விழா நேற்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி, தலைவர்கள் வெளியிட்டுள்ள செய்தியில் கூறியிருப்பதாவது: ஆளுநர் ஆர்.என்.ரவி: சிறந்த தொலைநோக்கு பார்வையாளர், புகழ்பெற்ற அரசியல் தலைவர், சிறந்த எழுத்தாளர், கவிஞர், ஈர்க்க வைக்கும் பேச்சாளர் என பன்முகத் திறனுடன் திகழ்ந்த வர்வாஜ்பாய். பிறந்தநாளில் அவருக்கு பணிவுடன் மரியாதை செலுத்துவோம். இந்தியாவை முன்னேற்ற வைக்கும் அவரது பார்வை, வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்க என்றும் நம்மை வழிநடத்தும்.

தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை: சுதந்திர இந்தியாவின் உள்நாட்டு, வெளிநாட்டுகொள்கைகளை வடிவமைத்ததில் மிகப்பெரிய பங்கு வகித்தவர். அணு ஆயுத நாடுகளில் ஒன்றாக உருவாக்கி, நமது பாரதத்தைவல்லரசுகளின் வரிசையில் இடம்பெற செய்தவர். கார்கில் போரில்நம் தேசத்தின் எதிரிகளை தோற்கடித்தவர். பெண்களின் முன்னேற்றம், சமத்துவம், சமூக நீதிக்காக

அயராது உழைத்தவர். அவரது தலைமையும், தொலைநோக்கு பார்வையும் கோடிக்கணக்கான நம் நாட்டு மக்களை இன்றும் வழி நடத்துகிறது.

**தலைவர்கள் மரியாதை:** சென்னை தியாகராய நகரில் உள்ள பாஜக மாநில தலைமை அலுவலகமான கமலாலயத்தில் மலர்களால் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த வாஜ்பாய் படத்துக்கு பாஜக மாநில துணை தலைவர் வி.பி.துரைசாமி, ஊடகபிரிவு மாநில தலைவர் ரங்கநாயகலு, மாவட்ட தலைவர் விஜய் ஆனந்த் உள்ளிட்ட நிர்வாகிகள் மரியாதை செலுத்தினர்.

வாஜ்பாய் பிறந்தநாளையொட்டி, தமிழக பாஜக சார்பில் பல்வேறு இடங்களில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. சென்னையில் சூளைமேடு தயாளு அம்மாள் தெரு, எழும்பூர்வீராசாமி தெரு, அயனாவரம் ஜாயின்ட் ஆபீஸ் பகுதி, ராமானுஜர் நகர் உள்ளிட்ட இடங்களில் பாஜகவினர் நலத்திட்ட உதவிகளை வழங்கினர். வாஜ்பாய் பிறந்தநாளை நல்லாட்சி தினமாகபல்வேறு இடங்களில் பாஜகவினர் கொண்டாடினர்.

டெல்லியில் உள்ள வாஜ்பாய் நினைவிடத்தில் தமாகா தலைவர்ஜி.கே.வாசன் மரியாதை செலுத்தினார்.

## 3 புதிய குற்றவியல் தடுப்பு சட்டங்களுக்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு ஒப்புதல்!

புதுடெல்லி: **பழைய குற்றவியல் சட்டங்களை மறுசீரமைக்கும் விதமாக மத்திய அரசு புதிதாக கொண்டு வந்த மூன்று குற்றவியல் சட்ட மசோதாக்களும் மக்களவையில் அண்மையில் நிறைவேற்றப்பட்டது. இதற்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு தற்போது ஒப்புதல் அளித்துள்ளார்.**

பாரதிய நியாய சன்ஹிதா, பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா, பாரதிய சாக் ஷியா ஆகிய 3 மசோதாக்களையும் மக்களவையில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா கடந்த 12-ம் தேதி அறிமுகம் செய்தார். இதன் மீதான விவாதம் மக்களவையில் கடந்த வாரம் நடந்தது. தொடர்ந்து குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது.

மக்களவையில் நிறைவேற்றப்பட்ட இந்த 3 புதிய குற்றவியல் தடுப்பு சட்டங்களுக்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு ஒப்புதல் அளித்துள்ளார்.

## ஜேஎன்.1 வகை கோவிட் தொற்றும், 'ஏமாற்றும்' தன்மையும் - மருத்துவ நிபுணர்கள் சொல்வது என்ன?

**நியூயார்க் / புதுடெல்லி:** அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையத்தின் (US CDC) சமீபத்திய தரவுகளின்படி, கரோனா வைரஸின் ஒமிக்ரான் என்னும் வேரியன்ட்டின் புதிய துணை வேரியன்ட் ஜேஎன்.1 (JN.1) கரோனா வைரஸ் தற்போது அமெரிக்காவில் கோவிட் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளவர்களில் 44.2% பேருக்குக் காரணமாக அமைந்துள்ளது என்பது தெரிய வந்துள்ளது. இந்தியாவில் இந்த புதிய ஜேஎன்1 வைரஸ் பாதிப்பினால் 63 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனிடையே, கர்நாடக மாநிலத்தில் மூவர் உயிரிழந்ததும் கவலைகளையும் அச்சங்களையும் அதிகரித்துள்ளது.

பொதுவாகவே குளிர்கால வானிலை, மக்களை காய்ச்சல், சளி, இருமல், மூச்சுத்திணறல் என்று முடக்கிப் போட்டுவிடும் நிலையில், பிற வைரஸ்கள் பரவுவதால் கோவிட் 19-ஐ ஏற்படுத்தும் கரோனா வைரஸான SARS-CoV-2, தொடர்ந்து உருமாற்றம் அடைந்து பரவி வருகிறது. இந்நிலையில், கரோனா வைரஸின் சமீபத்திய திரிபு வடிவமான ஜேஎன்.1 என்ற வைரஸ் மிகவும் அதிகம் பரவக் கூடியது என்று யேல் பல்கலைக்கழக மருத்துவ அறிக்கையும், அமெரிக்க நோய்க்கட்டுப்பாட்டு அமைப்பும் தெரிவிக்கின்றன. குளிர் காலங்களில் ஜேஎன்.1 கரோனா வேரியன்ட் பரவும் அபாயம் இருப்பதாக அமெரிக்க நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், யேல் பல்கலைக்கழக தொற்றுநோய் மருத்துவ நிபுணர் ஹெய்டி சபாட்டா கூறும்போது, "இந்த புதிய வேரியன்ட் பற்றி இன்னும் எங்களுக்கு மேலதிக விவரங்கள் கிடைக்கவில்லை" என்றார். இதோடு பிற துணை உருமாற்ற வைரஸ்களும் சுழற்சியில் உள்ளன. டிசம்பரில்

அமெரிக்காவில் ஹெச்வி.1 என்ற வைரஸ் பரவி வந்தது. நோயினால் பாதிக்கப்பட்டவர்களில் 29% பேரை சோதித்தபோது இந்த வைரஸ் இருந்தது தெரியவந்தது. ஈஜி.5 என்ற இன்னொரு வேரியன்ட் உள்ளது. இது முதலிடத்தில் இருந்தது. இப்போது அது ஜேஎன்.1 வைரஸினால் இரண்டாம் இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இதுவரை ஜேஎன்.1 கடுமையான நோய்த்தொற்றை ஏற்படுத்துவதற்கான அறிகுறிகள் எதுவும் தெரியவில்லை. ஆகவே, பொதுச் சுகாதாரத்துக்கு பேராபத்து இருப்பதாகத் தெரியவில்லை என்று அமெரிக்க நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையம் தெரிவித்தாலும், எச்சரிக்கையுடன் இந்த வைரஸை அமெரிக்கா தொடர்ந்து கண்காணித்து வருகின்றது.

யேல் பல்கலை. மருத்துவ நிபுணர் சபட்டா கூறும்போது, “சுவாச ஒத்திசைவு வைரஸ் [respiratory syncytial virus-RSV] மற்றும் காய்ச்சல் வைரஸ் இன்னமும் சுழற்சியில் உள்ளது என்பது மக்கள் தெரிந்து கொள்ள வேண்டிய மிக முக்கியமான விஷயம் என்று நான் கூறுவேன். எந்த ஒரு புதிய உருமாற்றமடையும் வைரஸும், SARS-CoV-2 வைரஸ் இன்னும் உருவாகி வருகிறது என்பதற்கான அறிகுறியாகும். ஆகவே, கரோனா இன்னமும் நம்முடன்தான் உள்ளது என்ற உண்மையை நாம் புறக்கணிக்க முடியாது” என்று எச்சரித்துள்ளார்.

**ஜேஎன்.1 எங்கிருந்து வந்தது?** - கடந்த செப்டம்பரில் அமெரிக்காவில் ஜேஎன்.1 வைரஸ் இருப்பது தெரியவந்தது. பைரோலா என்று அழைக்கப்படும் BA.2.86 என்ற வைரஸுடன் ஜேஎன்.1 வைரஸ் நெருங்கிய உறவு கொண்டது. ஓமிக்ரான் வைரஸின் வம்சாவளியில் இந்த வைரஸ் வருகிறது. இந்த ஓமிக்ரான் தான் 2021-ல் அமெரிக்காவையே உலுக்கியது. இது பல வடிவங்கள் எடுத்துவிட்டது. இப்போது இந்த அசல் வடிவம் சுழற்சியில் இல்லை. BA.2.86 வேரியன்டுக்கும் ஜேஎன்.1 வேரியண்டுக்கும் உள்ள வித்தியாசம் என்னவெனில் ஜேஎன்.1 வைரஸ் அதன் ஸ்பைக் புரதத்தில்

இன்னுமொரு உருமாற்றத்தைக் கொண்டுள்ளது. இந்த மாற்றம் வைரஸின் மையமான தன்மைகளை மாற்றாது. ஆனால், முதற்கட்ட ஆய்வுகள் தெரிவிப்பதுதான் கவலையளிக்கும் ஓர் அம்சம், 'இது உடலின் நோய்த் தடுப்பு, நோய் எதிர்ப்புச் சக்திகளையும் கூடுதலாக ஏமாற்றி தொற்றக் கூடியது' என்பதே.

ஜேஎன்.1 வைரஸ் குறித்து எதையும் திட்டவட்டமாகச் சொல்வதற்கு இப்போதைக்கு போதுமான ஆதாரம் இல்லை என்றாலும், இது கடுமையான நோய் அல்லது முந்தைய வேரியன்ட்களுடன் தொடர்புடைய அறிகுறிகளை விட அதிகமான பாதிப்புகளை ஏற்படுத்தும் என்று இப்போதைக்கு கூற முடியவில்லை என்கிறது அமெரிக்க நோய்தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையம். ஆகவே, இதற்கான அறிகுறிகள் என்பது பொதுவான கரோனா அறிகுறிகளையே கொண்டிருக்கும். தீவிரத்தன்மை அந்தந்த தனிநபரின் நோய் எதிர்ப்பாற்றலைப் பொறுத்து வேறுபடும். ஆனால், இது மற்ற கரோனா வேரியன்ட்களை விட நம் உடல் எதிர்ப்பாற்றலை சாமர்த்தியமாக ஏமாற்றித் தொற்றக்கூடியது என்பதே.

SARS-CoV-2, இன்ஃப்ளுயன்ஸா மற்றும் RSV ஆகிய 3 வைரஸ்களும் குளிர்காலத்தில் வரவே செய்யும். இதனை அமெரிக்க மருத்துவ உலகம் 'டிரிபிள்டெமிக்' (tripledemic) என்று அழைக்கின்றது. இப்போது இந்த வைரஸ்களுக்கு எதிரான கோவிட் வாக்சின்கள் புழக்கத்தில் உள்ளதால் பயப்பட வேண்டியதில்லை என்கின்றனர்.

ஆகவே சளி, காய்ச்சல், தொண்டைக் கட்டு, குளிர், மூக்குசளி கொட்டுதல், தலைவலி, மூட்டு மற்றும் தசை வலி, மூச்சுவிடுதலில் சிரமம், ருசி மற்றும் வாசனை சக்தியை இழத்தல், வயிற்று உபாதை, லேசான வயிற்றுப்போக்கு, வாந்தி போன்ற நோய் அறிகுறிகள் ஏற்படும் போது மருத்துவரை ஆலோசித்துக் கவனமாக இருக்க வேண்டும்.

## தூய்மையான, ஆரோக்கியமான உணவு வழங்கும் 6 ரயில் நிலையங்களுக்கு 'ஈட் ரைட்' சான்று

**சென்னை:** ஆரோக்கியமான மற்றும் தூய்மையான உணவு வழங்கி வரும் தெற்கு ரயில்வேயில் சென்னை சென்ட்ரல் உட்பட 6 ரயில் நிலையங்களுக்கு ஈட் ரைட் நிலையம் என்ற சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

நல்ல தரமான, ஆரோக்கியமான உணவு வழங்கும் நிலையங்களை ஆய்வு செய்து, தேர்ந்தெடுத்து சான்றிதழ்களை வழங்குவது இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிறுவனம் (எஃப்.எஸ்.எஸ்.ஏ.ஐ) தலைமையிலான ஈட் ரைட் நிலையம் இயக்கத்தின் ஒரு முன்முயற்சியாகும். இந்த முயற்சியின் கீழ், ரயில்வே நிலையங்களில் சுகாதாரமான, சத்தான மற்றும் பாதுகாப்பான உணவு கிடைப்பதை உறுதி செய்வது முதன்மை நோக்கமாகும். ஸ்டால்கள் உட்பட நிலையங்களுக்குள் உள்ள கேட்டரிங் நிறுவனங்களை உள்ளடக்கிய உணவுகளை கையாளுதல் மற்றும் தயாரிப்பதலில் பாதுகாப்பான நடைமுறைகளை செயல்படுத்துவதற்கு சான்றிதழ் உத்தரவாதம் அளிக்கிறது.

சான்றிதழைப் பெற நிலையங்களில் தண்ணீரின் தரம், தூய்மை, சுகாதாரம், பூச்சி கட்டுப்பாடு, பதிவேடு பராமரிப்பு மற்றும் உணவுப் பொருள் ஆய்வு ஆகியவற்றின் கீழ் மதிப்பீடு செய்யப்படுகின்றன. இதன் அடிப்படையில், சான்றிதழ் வழங்கப்படுகிறது.அந்த வகையில், தெற்கு ரயில்வேயில் சென்னை சென்ட்ரல், திருச்சிராப்பள்ளி, மயிலாடுதுறை, திருச்சூர், கும்பகோணம், தஞ்சாவூர் உள்ளிட்ட 6 ரயில் நிலையங்களுக்கும், திருச்சி பல்துறை மண்டல பயிற்சி நிறுவனத்துக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.